செய்தி வெளியீடு எண்: 710 நாள்:22.10.2019

**இன்று (22.10.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் நியூஸ்7 தொலைக்காட்சியின் தமிழ் ரத்னா விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை:**

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மக்களைச் சென்றடைந்து, விழிப்புணர்வை ஏற்படுத்தும் உன்னத ஊடகம் தொலைக்காட்சி. அத்தகைய தொலைக்காட்சியை தொடங்கி 2014–ஆம் ஆண்டு முதல் ஒளிபரப்பை நடத்தி, அனைத்துத் தரப்பினரிடமும் நல்ல வரவேற்பை பெற்று வரும் நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சியின் விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த சிறப்பான விழாவில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்திகளை வெளியிடுவதில், அச்சு ஊடகம், வானொலி ஆகியவற்றின் எழுச்சியாக காட்சி ஊடகம் ஆட்சி பெறுகின்ற அளவிற்கு இன்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பல்வேறு கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வதோடு அறிஞர்களைக் கொண்டு விவாதங்கள் நடத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தி அரசுத் திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்த உந்துசக்தியாக விளங்குகிறது. மக்களாட்சியின் மகத்தான நான்கு தூண்களான நீதி நிர்வாகம், சட்டமன்றம், அரசு நிர்வாகம், ஊடகங்கள் ஆகியவை திகழ்கின்றன. அரசின் அறிவிப்புகளை உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவிப்பதோடு ஏழை, எளியோரின் இன்னல்களை அரசுக்கு தெரியப்படுத்தவும், பின்னூட்டம் தருகின்ற செயல்பாடுகளில் செய்கின்ற

சாதனமாகவும் ஊடகங்கள் செயல்பட்டு அரசு, நிர்வாகம், மக்கள் ஆகியோரை ஒரே புள்ளியில் ஒருங்கிணைக்கின்றன. உலகத்தையே பார்க்க உதவும் சன்னலாக தொலைக்காட்சி நிறுவனங்கள் பணியாற்றுகின்றன. கடைக்கோடியில் நடக்கும் சம்பவங்களை கால் நொடியில் நம் வரவேற்பறைக்கு அவை கொண்டு வந்து விடுகின்றன. அப்பணியில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் நியூஸ் 7 தமிழ்த் தொலைக்காட்சியின் பணி பாராட்டுக்குரியது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

நாட்டில் மக்களாட்சி தழைத்தோங்க அரசாங்கமும், ஊடகங்களும் இரு கண்கள் போல செயல்பட வேண்டும். ஊடகத்தின் மூலம் படிக்காத மக்களும் செய்திகளை கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. ஊடகங்கள் மக்களிடையே விழிப்புணர்வுடன் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

ஊடகங்களின் மூலம் ஒளிபரப்பபடும் செய்திகளுக்கு மக்களிடையே அதிக நம்பகத்தன்மை உள்ளதை கருத்தில் கொண்டும், தனி மனித சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் மனதில் வைத்தும் நிர்வாகம் நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்ப வேண்டும், உண்மைச் செய்திகளை வெளியிட வேண்டும்.

**“ஒரு செய்தியைக் குறித்து நான் ஒருவருடன் ஒரு மணி நேரம் பேசுவதாக இருந்தால், என்ன பேசப் போகிறேன் என கால் மணி நேரம் சிந்தனை செய்கிறேன். வருகிறவர் என்ன பேசப் போகிறார் என்பது குறித்து முக்கால் மணி நேரம் சிந்திக்கின்றேன்” என்றார் ஆப்ரகாம் லிங்கன் அவர்கள்.** இந்த அறிவுரையை

ஊடகங்கள் அவசியம் பின்பற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால், ஊடகங்கள் ஒளிபரப்புவதை மக்கள் அசைக்க முடியாத உண்மை என்று கருதுகிறார்கள். இதை மனதில் வைத்து நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சி எடுத்துக்காட்டாக செயல்பட வேண்டுமென்று அன்போடு இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசு செயல்படுத்தும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் பற்றிய செய்திகளுக்கு ஊடகங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். இது எங்கோ மூலையில் பட்டிதொட்டிகளில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவிகரமாக இருக்கும். இந்தச் செய்திகள் மூலம் ஏழை மக்கள் பயன் பெற்றார்கள் என்றால் அதுவே ஊடகங்களுக்குக் கிடைக்கும் உண்மையான வெற்றியாகும். எனவே, அரசுத் திட்டங்களால் பயன் பெறுபவர்களின் வெற்றிக் கதைகளை வெளியிட்டு மற்றொரு முறை துய்க்கும்படி தூண்டுகின்ற நற்பணியை ஊடகங்கள் செய்தால் நாம் வறுமையற்ற நிலையை உருவாக்க முடியும். அதே நேரத்தில் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன் வைக்க வேண்டும். அதை அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தக்க ஆதாரங்களோடு முன்வைத்தால் பிரச்சினைகளை களைவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

சட்டமன்ற நிகழ்வுகள், நாடாளுமன்ற செய்திகள், பொருளாதாரம் குறித்த தகவல்கள், அறிவியல் தொழில் நுட்ப விளக்கங்கள் போன்ற செய்திகளை எளிமையாகவும், சுருக்கமாகவும் பயன்படும் வகையில் அளிக்க வேண்டும்.

அண்மைக் காலமாக ஊடகங்கள் செய்திகளை வெளியிடுவது மட்டுமல்லாமல், பொது மக்களுக்கு மருத்துவம் பற்றிய குறிப்புகள், மாணாக்கர்களுக்கு கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள், தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு ஊக்க முகாம்கள், விளையாட்டுச் செய்திகள், குழந்தைகள் வளர்ப்பு பற்றிய செய்திகள், வேளாண் பெருமக்களுக்கு விபரங்கள், தொழில் முனைவோருக்கு ஆலோசனைகள் ஆகிய நல்ல நிகழ்வுகளை நடத்துவது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

அதற்கும் மேலாக, பல்வேறு தொழில்களில் சாதனை புரிந்தவர்கள், மக்களின் நலன் காக்க பொதுத் தொண்டு புரிந்தவர்கள் ஆகியோரை கௌரவிக்கும் வகையில் ஆண்டு தோறும் விருதுகள் வழங்குவது சமூக அக்கறையை பிரதிபலிக்கின்றது. இத்தகைய விருதுகள் சாதனையாளர்களை மதிப்பீடு செய்கின்ற துலாக்கோலாக மட்டுமல்லாமல், மற்றவர்களையும் நற்பணிகள் செய்ய ஊக்கப்படுத்தும் தூண்டுகோலாகவும் இருக்கின்றன. இதை கருத்தில் கொண்டு நியூஸ் 7 தமிழ்த் தொலைக்காட்சி ‘தமிழ் ரத்னா’ விருதுகளை தகுதியுள்ளவர்களுக்கு வழங்குவது போற்றத்தக்கது.

அதிக மக்கள் பார்க்க வேண்டும், பரபரப்பை ஏற்படுத்த வேண்டும், அதன் மூலம் பார்வையாளர்களின் புள்ளி அதிகரிக்க வேண்டும், விளம்பரங்கள் வெகுவாக வரவேண்டுமென்ற குறுகிய பார்வையில், செய்திகளை சரி பார்க்காமல், அவசரகதியில் வெளியிடாமல் நன்றாக ஆராய்ந்து, களத்தின் உண்மைத்

தன்மையை அறிந்து வெளியிட வேண்டும். அதுவே, ஊடகங்களின் தார்மீகக் கடமை என்பதை உணர்த்த விரும்புகின்றேன்.

இன்று தமிழ் ரத்னா விருது பெறும் பெரியவர் மரியாதைக்குரிய டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் பசுமைப் புரட்சியின் நாயகர். வறண்ட நிலத்திலும் மரகத வயல்களில் பச்சை குத்தியவர், 92 வயதிலும் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பது நம்மையெல்லாம் வியக்க வைக்கிறது. இவருக்கு விருதுகள் வழங்காத நிறுவனங்களோ, பல்கலைக்கழகங்களோ இல்லை. உலகம் போற்றும் ஒரு வேளாண் விஞ்ஞானியாக திகழும் இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதில் நமக்கெல்லாம் மிகுந்த பெருமை.

இவர் பிறந்தது குடந்தை. பள்ளிப் படிப்பு முடித்த பின்னர், இளநிலை அறிவியல் பட்டம் பெற்றது திருவாங்கூர் பல்கலைக்கழகம். வேளாண்மையில் இளநிலை பயின்றது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம். எண்ணற்ற ஆய்வு நிறுவனங்களில் பணியாற்றிய பிறகு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். இவர் இந்தியாவிலும், உலக அளவிலும் புகழ்பெற்ற ஆய்வு நிலையங்களில் பேராசிரியர், ஆராய்ச்சி நிர்வாகி, தலைவர் ஆகிய பதவிகளை வகித்தவர். மத்திய வேளாண்மைத் துறை செயலாளர், மத்திய திட்டக்குழு உறுப்பினர் போன்ற உயர் பதவிகளில் மின்னியவர்.

உணவு உற்பத்தியில் பின்தங்கியிருந்த நமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியவர். உணவு தானியங்களை இறக்குமதி செய்த நிலையை முற்றிலும் மாற்றி, இந்தியா தன்னிறைவு அடைய

முயற்சி ஏற்படுத்தியதற்கு இவரும் முக்கிய காரணம் என்பதால் பசுமைப் புரட்சியின் பிதாமகனாகக் கருதப்படுகிறார்.

இந்திய அரசு பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண் ஆகிய பட்டங்களை இவருக்கு வழங்கி கௌரவித்திருக்கிறது. இந்தியாவிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள 38 பல்கலைக்கழகங்கள் இவருக்கு மதிப்புறு முனைவர் பட்டத்தை வழங்கியுள்ளன. சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் 41 விருதுகளை பெற்றவர். பெருமைமிகு மகசேசே விருது, கொலம்பியா பல்கலைக்கழகத்தின் வால்வோ விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவருக்கு அண்மையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் சார்பில் ஏர் அறிஞர் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு.எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், இன்றைய இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறார். இன்றைய இளைஞர்கள் இவரைப்போல நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக பணியாற்ற வேண்டும் என்று அன்போடு இந்த நிகழ்ச்சியின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் இலக்கியத்தில் தனக்கென ஒரு இடத்தை ஆய்வுகளின் மூலம் பெற்ற திரு. தொ.பரமசிவன் அவர்கள் இலக்கிய ரத்னா விருது பெறுவதற்கு பாராட்டுகின்றேன். இசை ரத்னா விருது பெறும் casteless collective இசைக் குழுவையும், நாடக ரத்னா விருது பெறும் திரு.பிரளயன் அவர்களையும், கலை ரத்னா விருது பெறும் திரு.கட்டைக்கூத்து ராஜகோபால் அவர்களையும், விளையாட்டு

ரத்னா விருது பெறும் திரு. சதீஷ் சிவலிங்கம் அவர்களையும், ஆசிரியர் ரத்னா விருது பெறும் திரு.கோவிந்த பகவான் அவர்களையும், தொழில் ரத்னா விருது பெறும் திரு.சி.பி.செல்வன் அவர்களையும், மகளிர் ரத்னா விருது பெறும் திருமதி. பாரதி பாஸ்கர் அவர்களையும், யுவ ரத்னா விருது பெறும் திரு.விழியன் அவர்களையும், சக்தி ரத்னா விருது பெறும் நிளீனா பிரசீதா அவர்களையும், சேவை ரத்னா விருது பெறும் திருச்சி ரவி அவர்களையும், சிறப்பு விருது பெறும் திரு.முத்தாலங்குறிச்சி காமராசு அவர்களையும் மனமார, உங்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் பாராட்டுகின்றேன். நம்மையெல்லாம் சிரிக்க வைத்து மகிழ்ந்து பிரியா விடை பெற்ற கிரேசி மோகன் அவர்களுக்கு சிறப்பு விருது வழங்குவது போற்றத்தக்க செயலாகும் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு தொலைக்காட்சி என்பது ஒரு மிகப்பெரிய சாதனம். ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படுகின்ற நெகிழிப் பொருட்கள் ஏற்கனவே அரசால் தடை செய்யப்பட்டது. அதைத்தான் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் இங்கே தெரிவித்தார். பசு ஒன்றின் வயிற்றிலிருந்து சுமார் 50 கிலோ எடையுள்ள நெகிழி எடுக்கப்பட்டதை நேற்றைய தினம் தொலைக்காட்சியிலும் கண்டிருப்பீர்கள். ஆகவே, நம்மால் தூக்கி எறியப்பட்ட நெகிழிகளை, வாய்பேசாத ஜீவனாக இருக்கின்ற பசு உண்ட காரணத்தினால் அது பிழைக்க முடியாத சூழ்நிலையில், அதன் உரிமையாளரால் அது கால்நடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, கால்நடை மருத்துவக் குழுவினரால் அதற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு சுமார் 50 கிலோ நெகிழி அகற்றப்பட்டது. அதை அகற்றியதன் காரணமாக பசு இன்றைக்கு உயிருடன்

இருக்கின்றது. இப்படி பல இடங்களிலும், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் ஏராளமாக கிடக்கின்றன, கடைகளிலே ஏராளமாக இருக்கின்றன, கழிவுநீர் கால்வாய்களில் சிந்திக் கிடக்கின்றன. அதையெல்லாம் அங்கே போடாமல் குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும். ஏற்கனவே ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் அரசால் தடை செய்யப்பட்டது. தொலைக்காட்சிகள் குறும்படத்தின் வாயிலாக, இதனுடைய முக்கியத்துவத்தை அறிந்து, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையில் வெளியிட்டால் சாலச் சிறந்ததாக இருக்கும். அரசாங்கம் எவ்வளவுதான் சட்டம் போட்டாலும், அதற்கு தூண்டுகோலாக தொலைக்காட்சி இருக்க வேண்டும். அப்படி நீங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றபொழுது, அது அரசுக்கும், மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

மழை வந்துவிட்டால் டெங்கு காய்ச்சல் வந்துவிடுகின்றது. இதை அரசால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. பொதுமக்களும் இதிலே இணைந்து செயல்பட்டால்தான் டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சலை கட்டுப்படுத்த முடியும், அதற்கு மக்களும் துணை நிற்கவேண்டும். நன்னீரில் தான் இந்தக் கொசு வளர்வதாக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆகவே, நம் வீட்டைச் சுற்றி தேங்கி நிற்கின்ற நீரை அகற்றி சுத்தப்படுத்த வேண்டும். அரசே அதை சுத்தப்படுத்த வேண்டும் என்றால் முடியாத காரியம். சென்னை மாநகராட்சி பரந்து விரிந்த பகுதி, எவ்வளவு பேரை வைத்து இதை சுத்தம் செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதில் மக்களும் தங்களை ஈடுபடுத்திக்

கொள்ள வேண்டும், தங்களுடைய பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். நன்னீரில் உற்பத்தியாகும் இக்கொசுக்களை தடுக்க வேண்டும் என்பதற்குத் தான் நான் லண்டன் சென்றபொழுது இந்த கொசு எப்படி உற்பத்தியாகின்றது, அதை எப்படி தடுப்பது, வந்த பிறகு அதை எப்படி கட்டுப்படுத்துவது என்பதையெல்லாம் ஆய்வு செய்வதற்காக கிட்டத்தட்ட 200 நபர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததை நான் நேரடியாகஙப பார்த்தேன். கொசு வளர்க்கிறார்கள், அது எப்படி வளர்கிறது, எந்த நீரில் வளர்கிறது, எந்த நிலையில் அதை அழிக்க முடியும், அது கடித்த பிறகு காய்ச்சல் ஏற்பட்டால் அதை எப்படி குணப்படுத்துவது போன்றவற்றையெல்லாம் அந்த ஆராய்ச்சி நிலையத்தில் நான் கண்டறிந்தேன். அதை தமிழகத்திற்கும் கொண்டுவந்து, டெங்கு காய்ச்சலையும், மலேரியா காய்ச்சலையும் கட்டுப்படுத்துவதற்கு அரசு நிச்சயமாக உரிய நடவடிக்கையை எடுக்கும், அதற்கு மக்களும் துணை நிற்க வேண்டும், நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சியும் உதவிகரமாக இருக்க வேண்டும். நீங்கள் குறும்படமாக இதை காட்டுகின்றபொழுது, தமிழகத்தில் கிராமத்தில் வாழ்கின்ற மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அதை சரிசெய்ய முடியும். அதற்கு உதவவேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நீர் மேலாண்மை திட்டம் ஒரு முக்கியமான திட்டம். ஏனென்றால், தாமிரபரணி ஆற்றைத் தவிர்த்து மற்ற ஆறுகளெல்லாம் மற்ற மாநிலங்களிலிருந்து உற்பத்தியாகித்தான் தமிழகத்திற்கு வருகின்றன. அவர்களுக்குப் போக, உபரி நீர்தான் நமக்கு கிடைக்கிறது. சட்டரீதியாக கிடைக்கின்ற நீர் கூட கிடைக்காமல்

போகின்றது. இந்தக் காலகட்டத்தில் எப்படி நீரை சேமிப்பது, இருக்கின்ற நீரை எப்படி பகிர்ந்து கொள்வது என்பதையெல்லாம் ஊடகத்தின் வாயிலாக நீங்கள் தெரிவித்தால் மக்களுக்கு ஒரு விழிப்புணர்வு ஏற்படும்.

அரசைப் பொறுத்தவரை குடிமராமத்துத் திட்டம் என்ற அற்புதமான திட்டத்தை செய்து கொண்டிருக்கிறோம். பொதுப்பணித் துறையின் மூலம் 14,000 ஏரிகள் பராமரிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக பராமரிக்கப்படும் ஏரிகள், குளங்கள், ஊரணிகள், குட்டைகள் எல்லாம் சுமார் 26,000 இருக்கின்றன, சுமார் 40,000 ஏரி, குளம், குட்டை, ஊரணிகள் இருக்கின்றன. இதை ஒரே நேரத்தில் பராமரித்துவிட முடியாது. ஆனால், தொலைக்காட்சியில் நாங்கள் செய்வதை காட்டுவது கிடையாது. எதை எடுக்காமல் இருக்கின்றோமோ அதைத்தான் காட்டுகின்றீர்கள். 40,000 ஏரிகளும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மற்றும் பொதுப்பணித்துறைக்குட்பட்ட ஏரிகள் அனைத்தும் தூர்வாரப்பட வேண்டும், சரிசெய்ய வேண்டும் என்பதுதான் அரசின் திட்டம். ஒரே நேரத்தில் அதற்குத் தேவையான நிதி அரசிடம் கிடையாது, ஒரே நேரத்தில் அனைத்து பணிகளையும் செய்ய முடியாது. ஆகவே, படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நிதி ஒதுக்கி, குறிப்பிட்ட ஏரி, குளம், குட்டை, ஊரணிகளை எடுத்து, செப்பனிட்டு அந்தப் பணியை அரசு மேற்கொண்டு இருக்கிறது. ஆகவே, நாங்கள் செய்த பணிகளை காட்டினால் சரியாக இருக்கும். இந்த குடிமராமத்துத் திட்டத்தை முழுக்க, முழுக்க விவசாயிகள் பங்களிப்புடன் நாங்கள் செயல்படுத்துகின்றோம். அங்கு இருக்கின்ற விவசாயப் பெருங்குடிமக்கள், பொது நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள்,

இளைஞர்களை இதில் ஈடுபடுத்துவதை உங்கள் தொலைக்காட்சி மூலம் காண்பித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நாங்கள் தூர்வாரியவுடனே மீண்டும் அங்கே மழை பெய்கின்றபொழுது ஆறு, ஏழு மாதங்களுக்குப் பிறகு செடி, கொடிகளெல்லாம் வளர்ந்து விடும். அதை அந்த ஊர் மக்கள் அகற்ற வேண்டும். 40,000 ஏரிகளையும் அரசாங்கமே முழுவதுமாக எடுத்துக் கொண்டு பராமரிப்பது என்பது இயலாத ஒரு செயல். அது சரி செய்யப்பட்டு வருகிறது, அதில் எந்த மாற்றமும் கிடையாது. இருந்தாலும், குடிமராமத்துத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதை சரி செய்த பிறகு, அங்கே இருக்கின்ற விவசாயிகள் தன்னுடைய சொந்த ஏரியாகக் கருதி, பொதுமக்கள் குடிநீர் ஆதாரமாகக் கருதி இதை பராமரிக்கின்றபோது, அந்த ஏரி எப்போதுமே தூய்மையாக இருக்கும். இதை ஊடகம் வாயிலாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவதன் மூலம் விழிப்புணர்வு கிடைக்கும், இதனால் நீர் மேலாண்மைத் திட்டத்திற்கு ஒரு அடித்தளமாக அமையும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன்.

தொன்மையான நமது பழம்பெரும் தமிழர்களுடைய பண்பாட்டை சித்தரிக்கின்ற விதத்தில், நாம் எப்படியெல்லாம் வாழ்ந்தோம் என்பதை அகழ்வு ஆராய்வின் மூலமாக கிடைக்கப்பட்டுள்ள அந்த பகுதியை நம்முடைய மாணவர்கள் சென்று பார்க்க வேண்டும் என்று நமது நீதியரசர் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக எங்களுடைய அரசு அதற்கு ஏற்பாடு செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் நான் பங்கு பெற்றேன். மரியாதைக்குரிய நீதியரசர் கிருபாகரன்

அவர்கள் என்னிடத்தில் ஒரு தகவலை சொன்னார், நான் தமிழ் பற்று உள்ளவன், ஆகவே, நீங்கள் நினைத்தால் ஒரு உதவி செய்யலாம் என்றார், நிச்சயமாக செய்வேன் என்று சொன்னேன். அமெரிக்காவில் உள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்கு தமிழ் இருக்கை அமைக்க நீங்கள் அரசின் சார்பாக நிதி வழங்க வேண்டும் என்று சொன்னார். எவ்வளவு கொடுக்கலாம் என்று கேட்டேன். ரூபாய் 10 கோடி வழங்கினால் நன்றாக இருக்குமென்று சொன்னார். உடனடியாக அந்த இருக்கை அமைப்பதற்காக நாங்கள் ரூபாய் 10 கோடி அளித்தோம். அவர் சொன்ன சொல் பலித்துவிட்டது. அதற்குப் பிறகு அந்த இருக்கைக்கு மேல் அதிகமான நிதி சேர்க்கப்பட்டது. ஆகவே, தமிழ் ஆர்வமுள்ள நீதியரசர் அவர்களைப் பாராட்டி, இங்கே வருகை தந்த அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்து, நியூஸ் 7—ன் சேவை மக்களுக்குத் தேவை, அதை நல்ல முறையிலே ஒளிபரப்ப வேண்டும் என்று சொல்லி, நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சி மூலமாக விருதுகள் பெற்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்ற நேயர்களுக்கும், அற்புதமான கருத்துக்களை வழங்கிய நீதியரசர்களுக்கும் என்னுடைய நன்றியினை கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

——————

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**